



# வாசிப்பின் மகிழ்ச்சி 2022

பாலர் வகுப்பு 1 & 2



நடவடிக்கை 1

# ஒரேமாதிரி ஆனால் வேறுபட்டது

**தயார் செய்ய வேண்டியவை:**

1. வளைய வடிவிலான பொருள்கள் / உணவுகள்
2. பரிந்துரைக்கப்பட்ட மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்கள்
   - சஞ்சிகைகள் / செய்தித்தாள்கள்
   - பழ வலைகள்
   - துண்டு / கழுத்துத்துண்டு / சட்டை
3. மற்ற பொருள்கள்:
   - பசை / ஒட்டு நாடா
   - வண்ணத் தாள்
   - வண்ணந்தீட்டிகள் / வண்ணக் கோல்கள்
   - சாயங்கள்

**கற்றுக்கொள்பவை:**

1. சுற்றுச்சூழலில் உள்ள டோரஸ் / வளைய வடிவிலான பொருள்களை அடையாளம் காணுதல்
2. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் பிள்ளைக்கும் பெற்றோருக்கும் இடையேயான பிணைப்பை உருவாக்குதல்

வீட்டில் இருக்கும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி பிள்ளைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தும் நடவடிக்கை.

**உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்ய முடியும்:**

1. வளைய வடிவிலான பொருள்களின் / உணவின் படங்களைக் காட்டவும். உங்கள் பிள்ளையைப் படத்தைப் பார்த்து அதன் வடிவம், வண்ணம், ருசி, தன்மை மற்றும் அதன் செயல்பாடு ஆகியவற்றைப் பற்றிப் பேசச்சொல்லவும்.
2. வளைய வடிவம் என்று பொருள்படும் 'டோரஸ்' என்ற சொல்லை அறிமுகப்படுத்தவும்.
3. உங்கள் பிள்ளையை, மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி டோரஸ் / வளைய வடிவத்தை உருவாக்கச் சொல்லவும்.
4. டோரஸ் / வளைய வடிவத்தை ஒரு தாளின் மேல் ஒட்டி மற்ற பொருள்களைப் பயன்படுத்தி ஒரு கலைப்படைப்பை உருவாக்கச் சொல்லவும்.
   உதாரணமாக, டோனட், மிதவை போன்றவற்றைப் பிள்ளை உருவாக்கலாம்.
5. உங்கள் பிள்ளை தன் படைப்பைப் பற்றிப் பேச ஊக்குவிக்கவும்.



*பெற்றோர்களுக்கான உதவிக்குறிப்புகள்:*

வீட்டில் / சுற்றுச்சூழலில் இருக்கும் டோரஸ் / வளைய வடிவிலான பொருள்களைப் பற்றிப் பேச இந்த வாய்ப்பைப் பயன்படுத்திகொள்ளவும்.

நடவடிக்கை 2

# மீன் பிடி வளையம்

### தயார் செய்ய வேண்டியவை:

1. பரிந்துரைக்கப்பட்ட மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்கள்
   - சஞ்சிகைகள் / செய்தித்தாள்கள்
   - துணி
   - அட்டை
   - கயிறுகள்
2. பசை / ஒட்டு நாடாக்கள்
3. மிருதுவான பொம்மைகள் / பொம்மைகள்

### கற்றுக்கொள்பவை:

1. வெவ்வேறு வடிவங்களை அடையாளம் கண்டு பெயரிடுதல்

2. நடவடிக்கையை முடிக்க, சவால்களை ஏற்றுக்கொண்டு பிரச்சினையைத் தீர்த்தல்

பெற்றோருக்கிடையேயான பிணைப்பு நடவடிக்கை, சவால்களை எதிர்கொள்ளவும் பிரச்சினையைத் தீர்க்கவும் ஊக்குவிப்பதாக உள்ளது.

**உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்ய முடியும்:**

1. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்களிலிருந்து டோரஸ் / வளைய வடிவத்தை (உயிர்க்காவன் மிதவை ) செய்யச் சொல்லவும். உங்கள் பிள்ளை பயன்படுத்த விரும்பும் பொருளைத் தேர்ந்தெடுக்கச் சொல்லவும்.
2. உயிர்க்காவன் மிதவையில் ஒரு கயிற்றை இணைக்கவும்.
3. வட்டம், சதுரம், நீள்வட்டம், செவ்வகம் மற்றும் முக்கோணம் போன்ற வெட்டப்பட்ட வடிவங்களில் பெயர் வில்லைகளை உருவாக்கவும். ஒவ்வொரு மிருதுவான பொம்மை / பொம்மை மீது ஒட்டவும்.
4. உயிர்க்காவன் மிதவையை எறிந்து மிருதுவான பொம்மை / பொம்மையைப் பாதுகாக்க முடியும் என்பதை விளக்கவும்.
5. உங்கள் பிள்ளையின் வாய்ப்பில் வட்டப் பெயர் வில்லையுள்ள கரடி பொம்மை, சதுர வடிவிலுள்ள மகிழ்வூர்தியைக் காப்பாற்றவும் என்றெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லச் சொல்லவும்.
6. பொருளிலிருந்து இன்னும் அதிகமான தூரத்தில் நின்று நடவடிக்கையை நீட்டிக்கவும்.



*பெற்றோர்களுக்கான உதவிக்குறிப்புகள்::*

சவால்களைப் பற்றியும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகள் பற்றியும் உங்கள் பிள்ளையுடன் பேச இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவும்.